## இந்தியாவின் ‘நம்பர் ஒன்’ மாநிலமாக மட்டுமல்லாமல், தெற்காசியாவின் ‘மாடல்’ மாநிலமாக

# தமிழ்நாட்டை நிச்சயம் மாற்றிக் காட்டுவேன்!

## கொளத்தூர் - பிரச்சார நிறைவுக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஏப்.23 –**

**“தமிழ்நாட்டை சூப்பர்ஸ்டார் ஆக்கிய இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் ஆட்சி தொடர தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களிப்பீர்!” எனவும், “இந்தியாவின் நம்பர் ஒன் மாநிலமாக மட்டுமல்லாமல், தெற்காசியாவின் மாடல் மாநிலமாகத் தமிழ்நாட்டை நான் நிச்சயம் மாற்றிக் காட்டுவேன்!” “இது உறுதி... உறுதி... உறுதி..!” என்றும் கொளத்தூர் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரைத்தார்.**

கழகத்தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21-04-2026), சென்னை, கொளத்தூரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரை நிறைவுப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

என்னதான் ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டிற்கும் நான் முதலமைச்சராக இருந்தாலும், சென்னை - நான் பாசமாக வளர்த்த குழந்தை போன்று! ஏனென்றால் நான் அந்தளவிற்கு உங்களோடு ஒன்றி இருப்பவன். அதுமட்டுமல்ல, சென்னைக்கு மாநகரத் தந்தையாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயராக இருந்தவன் நான். சென்னை - பல கனவுகளுடன் நான் உருவாக்கிய திட்டங்களால் வளர்ந்திருக்கும் மாநகரம்! அதனால்தான் அப்படிச் சொல்கிறேன். அதிலும், இந்த நம்முடைய கொளத்தூர் என்னுடைய செல்லக் குழந்தை!

**கொளத்தூருக்கு வராமல் என்னால் இருக்க முடியாது!**

பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் எனப் பண்டிகைகளைக்கூட, நான் உங்களுடன்தான் கொண்டாடி இருக்கிறேன். முதலமைச்சர் பொறுப்பில் இருப்பதால் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டத்திற்கும் சுற்றுப்பயணம் சென்றாலும், பத்து நாட்களுக்கு ஒருமுறை கொளத்தூருக்கு வராமல் என்னால் இருக்கவே முடியாது. ஒரு வாரம் ஆனால், நம்முடைய சேகர்பாபுவிடம், “எப்போது தொகுதிக்குச் செல்லலாம்? தொகுதியில் என்ன வேலை நடக்கிறது?” என்று நானே கேட்க ஆரம்பித்துவிடுவேன்.

தேர்தல் அறிவித்ததும் வேட்புமனு தாக்கல் செய்ய வந்தேன்; அடுத்து இப்போதுதான் பிரச்சாரத்தின் கடைசி நாள் உங்களிடம் வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். ஏனென்றால், அந்த அளவிற்கு இந்தத் தொகுதிக்குத் தொடர்ந்து வந்து அனைத்துப் பணிகளையும் செய்து கொடுத்திருக்கிறேன். நான் செய்து கொடுத்த திட்டப் பணிகள்தான் எனக்காக இங்கு ஓட்டு கேட்டிருக்கின்றன. மற்ற வேட்பாளர்களுக்காகத் தமிழ்நாடு முழுவதும் சுற்றி வந்த நான், என்னுடைய தொகுதியில் மொத்தமாகவே ஒரு மணி நேரம்தான் சுற்றியிருக்கிறேன். கொளத்தூர் மக்கள் என் மேல் காட்டும் அன்பு அப்படிப்பட்டது.

வருடம் முழுவதும் நன்றாகப் படித்த மாணவன் தேர்வுக்கு முன்பு சிறியதாக ‘revise’ செய்தாலே போதும். அதுபோன்று, இத்தனை ஆண்டு உங்களுக்காக உழைத்திருக்கிறேன். நான் செய்த திட்டங்களே எனக்காகப் பேசும். நான் சொல்வது சரிதானே?

**கொளத்தூருக்கு பல திட்டங்களை தந்த நான் உங்களிடம் ஆதரவு கேட்கிறேன்!**

ஒவ்வொரு ஊருக்கும் சென்றபோது, அங்கு போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி வைத்தேன். கொளத்தூரில் எனக்கு நானே ‘intro’ கொடுத்துக் கொள்கிறேன். உங்களுக்காக உழைத்து இத்தனை திட்டங்களைக் கொளத்தூருக்குக் கொண்டு வந்த உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு மூன்று முறை வாய்ப்பு கொடுத்தீர்கள். உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து இன்னொரு முறையும் எனக்கு வாய்ப்பு கொடுங்கள். கொடுப்பீர்களா? கொளத்தூர் வேட்பாளர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் வெற்றி உறுதியா? நன்றி!

ஏற்கனவே ஒரு மாடல் தொகுதியாகக் கொளத்தூரை மாற்றி வைத்திருக்கிறேன். இன்னும் சிறப்பாக உயர்ந்த கொளத்தூராக, உறுதியாக மேம்படுத்துவேன். நிறைய பேர் என்னிடம், “மற்ற ஊர்களை விட நீங்கள் சென்னைக்கு நிறையத் திட்டங்களைக் கொண்டு வருவது போன்று இருக்கிறது” என்று சொல்வார்கள். நான் அனைத்து ஊர்களையும் சமமாகத்தான் பார்க்கிறேன். அனைத்து மாவட்டங்களுக்குமே அந்தந்தப் பகுதிகளின் மக்கள் தொகைக்கேற்பத் திட்டங்களைச் செய்து கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

இருந்தாலும், ஏன் நிறையப் பேருக்கு அப்படித் தோன்றுகிறது என்று யோசித்துப் பார்த்தேன். அப்போதுதான் புரிந்தது, கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பத்தாண்டுகாலமாகச் சென்னை முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டு இருந்தது. மாநிலத்தில் அ.தி.மு.க. ஆட்சியே இருந்தாலும்கூட, சென்னை வளர வேண்டும் என்றால், தி.மு.க.தான் வேண்டும் என்று, சென்னையின் தீர்ப்பு எப்போதுமே சாலிடாக தி.மு.க. பக்கம்தான் இருக்கும்! அதனாலேயே சென்னையைப் பழிவாங்குவது போன்று அ.தி.மு.க. ஆட்சியில் பாராமுகமாக வைத்திருப்பார்கள். நம்முடைய தலைநகரையே தவிக்கவிட்ட ஆட்சிதான் அ.தி.மு.க. ஆட்சி! சிறிய மழைக்கே வெள்ளத்தில் உங்களைத் தத்தளிக்கவிட்ட ஆட்சி அ.தி.மு.க. ஆட்சி!



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.4.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரவள்ளூர் சதுக்கத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்து உரையாற்றினார். இக்கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள் நாகராஜன், ஐசிஎஃப் முரளி, தோழமைக் கட்சிகளின் மாவட்ட கழக நிர்வாகிகள், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியை சார்ந்த கழக நிர்வாகிகள், பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி!

**சென்னையில் ஏராளமான திட்டங்களை நிறைவேற்றி புதுப்பித்திருக்கிறோம்!**

புதிதாக எதையும் செய்யவில்லை என்றாலும் பரவாயில்லை; முந்தைய தி.மு.க. அரசில் நாம் உருவாக்கிய கட்டமைப்புகளைக் கூடச் சீர்குலைத்து வைத்திருந்தார்கள். சென்னையைத் தேங்கவும், வளர்ச்சிக்காக ஏங்கவும் வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். சென்னைக்குச் சமமாக இருந்த மற்ற நகரங்கள் அனைத்தும் பத்தாண்டு அ.தி.மு.க. ஆட்சியில், வேறு லெவலுக்குப் போயிருந்தார்கள். அதைச் சரிசெய்வது போன்று, இப்போது நம்முடைய கடந்த 5 ஆண்டு ஆட்சியில், மளமளவெனச் சென்னையின் அனைத்துப் பகுதிகளிலும், மேம்பாலங்கள், மெட்ரோ பணிகள், பூங்காக்கள், நூலகங்கள், முதல்வர் படைப்பகங்கள், மழைநீர் வடிகால்கள், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பாக ஏழைகளுக்கு நகரின் மையப்பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள், விளையாட்டு மைதானங்கள், குத்துச்சண்டை அகாடெமி, நவீன பேருந்து நிலையங்கள், தாழ்தள பேருந்துகள், மின் பேருந்துகள், AC பேருந்துகள் எனப் பட்டியல் போட்டால் போய்க் கொண்டே இருக்கும்... அந்த அளவிற்கு வேலை பார்த்திருக்கிறோம்.

அதுவும் வடசென்னை வளர்ச்சித் திட்டம் எனக் கொண்டு வந்து, 8 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி, உட்கட்டமைப்புகளை மேம்படுத்தி, வடசென்னையின் இமேஜையே மாற்றிவிட்டோம். நிறைய பேர், இப்படி நாம் உருவாக்கிய இடங்களுக்குச் சென்று பார்க்கும்போது, “நம்முடைய சென்னையில் இப்படி ஒரு வசதியா? எப்படி இருந்த இடம் இப்படி மாறிவிட்டது?” என்று கேட்டு reels போடுகிறார்கள். அதையெல்லாம் பார்க்கும்போது எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியை விவரிக்க வார்த்தைகளே இல்லை.

இப்படியாக, அ.தி.மு.க.-வின் 10 ஆண்டு ஆட்சியில் கண்டுகொள்ளப்படாமல் இருந்த சென்னைக்கு, தலைநகருக்குரிய கவனம் இப்போதுதான் கிடைக்கிறது. நம்முடைய ஆட்சியில் தலைநகரைத் தலைசிறந்த நகராக மாற்றி இருக்கிறோம்.

> **அடுத்தகட்டமாக, நேற்று முன்தினம் ‘சென்னை சூப்பர் சிக்ஸ்’ என்ற பெயரில் ஒரு சிறப்புச் செயல்திட்டத்தையும் அறிவித்-திருக்கிறேன். ராபின்சன் பூங்காவில் கட்சி தொடங்கிய நாளிலிருந்தே சென்னை தி.மு.க.–வின் கோட்டை! யாராலும் உடைக்க முடியாத கோட்டை! 2021–இல் முழு வெற்றியைத் தந்து, நம்மை அரிய-ணையில் ஏற்றிய கோட்டை. அந்த வெற்றி இந்த முறையும் தொடர வேண்டும்! கடந்த முறையைவிட, அதிக வாக்கு வித்தியாசத்தில் இந்த முறை வெற்றி பெற வேண்டும். எத்தனை பேர் வந்தாலும், சென்னைக்-காக உழைக்கும் தி.மு.க. கொடி மட்டும்தான் சென்னையில் பறக்க வேண்டும்! பறக்கும்! இது உறுதி!**

அடுத்தகட்டமாக, நேற்று முன்தினம் ‘சென்னை சூப்பர் சிக்ஸ்’ என்ற பெயரில் ஒரு சிறப்புச் செயல்திட்டத்தையும் அறிவித்திருக்கிறேன். ராபின்சன் பூங்காவில் கட்சி தொடங்கிய நாளிலிருந்தே சென்னை தி.மு.க.-வின் கோட்டை! யாராலும் உடைக்க முடியாத கோட்டை! 2021-இல் முழு வெற்றியைத் தந்து, நம்மை அரியணையில் ஏற்றிய கோட்டை. அந்த வெற்றி இந்த முறையும் தொடர வேண்டும்! கடந்த முறையைவிட, அதிகவாக்குவித்தியாசத்தில் இந்த முறை வெற்றி பெற வேண்டும். எத்தனை பேர் வந்தாலும், சென்னைக்காக உழைக்கும் தி.மு.க. கொடி மட்டும்தான் சென்னையில் பறக்க வேண்டும்! பறக்கும்! இது உறுதி!

**கொளத்தூர் தொகுதியை ஒரு மாடல் தொகுதியாக மாற்றியுள்ளேன்!**

உங்களுக்கான திட்டங்களையும் வளர்ச்சிப் பணிகளையும் கொண்டு வந்திருக்கிறோம். எடுத்துக்காட்டிற்கு இந்த கொளத்தூர் தொகுதியையே எடுத்துக் கொள்ளுங்கள். இதை ஏன் நான் மாடல் தொகுதி என்று சொல்கிறேன் தெரியுமா? கடந்த 5 ஆண்டில் தமிழ்நாட்டில் முதல் முறையாக முதல்வர் படைப்பகங்கள், முதல்வர் கல்விச் சோலை அமைத்திருக்கிறோம். கொளத்தூருக்குத் தேவையான மேம்பாலங்கள் கட்டித் திறந்திருக்கிறோம். அதிக அளவிலான ஏரி, குளங்களைத் தூர் வாரிச் சீரமைத்திருக்கிறோம். நவீன பேருந்து நிலையங்கள், தரமான மருத்துவமனை, வசதியான திருமண மாளிகை, பூங்காக்கள், இளைஞர்களுக்கான மினி ஸ்டேடியம், விளையாட்டுத் திடல்களை அமைத்திருக்கிறோம். புதிதாகக் கல்லூரியைத் தொடங்கியிருக்கிறோம். வண்ண மீன்கள் வர்த்தக மையம் திறந்திருக்கிறோம். கொளத்தூரில்தான் அதிக அளவிலான அரசுப் பள்ளி புதிய கட்டடங்களைக் கட்டிக் கொடுத்து, smart வகுப்பறைகளை அமைத்திருக்கிறோம். இப்படி கொளத்தூரில் திரும்பும் பக்கமெல்லாம், புதிய புதிய கட்டமைப்புகளை உருவாக்கியிருக்கிறோம்!

**கொளத்தூர் மாடல் தொகுதி என்றால், திராவிட மாடல் ஆட்சியில், தமிழ்நாடே ஒரு மாடல் state தான்!**

தமிழ்நாடு முழுவதும் என்னுடைய இந்த பிரச்சார நிறைவு உரையைப் பார்க்கும் என்னுயிர் மக்களே... நாங்கள் ஆட்சிக்கு வந்து முதல் மூன்று ஆண்டுகளில் செய்த சாதனைகளைப் பார்த்தே, நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியாவிலேயே யாரும் பெற முடியாத நாற்பதுக்கு நாற்பது என்ற முழு வெற்றியைப் கொடுத்தீர்கள். அதே போன்று சட்டமன்றத் தேர்தலிலும் நாம் வரலாறு படைக்க வேண்டும். தமிழ்நாட்டின் தொடர் வளர்ச்சிக்காக எங்களுக்குத் தொடர்ச்சியான வெற்றியைத் தர வேண்டும்.

**நம் சாதனைத் திட்டங்களில் ஒருசிலவற்றைக் கூறுகிறேன்!**

நம்முடைய சாதனைத்திட்டங்களுடைய பெயர்களை மட்டும் சொன்னாலே, இன்றைக்கு ஒருநாள் போதாது. அதனால் ஒரு சில திட்டங்களை மட்டும் சொல்லி அது எப்படி மக்களோடு நெருங்கி இருக்கிறது, அந்தத் திட்டங்களால் பயனடையும் பயனாளிகள் இந்த ஸ்டாலினை எப்படிப் பார்க்கிறார்கள் என்று சொல்கிறேன்.

மகளிர் மேம்பாடு என்று எடுத்துக் கொண்டால், மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வாங்கும் சகோதரிகள், இந்த ஸ்டாலினை நினைத்துப் பார்ப்பார்கள்.

ஒவ்வொரு முறையும் விடியல் பேருந்தில் சுதந்திரமாகப் பயணிக்கும் போதும் என்னை நினைத்துப் பார்ப்பீர்கள்!

அதேபோன்று தோழி விடுதிகள் திட்டம், pink ஆட்டோக்கள், கருப்பை வாய் புற்று நோய் தடுப்பூசி வழங்கும் திட்டம் என நிறைய இருக்கின்றன.

கல்வி வளர்ச்சி என்று எடுத்துக் கொண்டால், காலை உணவுத் திட்டத்தில் சுவையான உணவைச் சாப்பிடும் குழந்தைகளும், காலையில் சீக்கிரமே எழுந்து வேலைக்குச் செல்லும் பெண்களும், என்னை நன்றியோடு நினைத்துப் பார்ப்பார்கள்.

புதுமைப்பெண் திட்டத்தில் மாதம் ஆயிரம் வருகிறது என்று கல்லூரிக்குச் செல்லும் மாணவிகள் அனைவரும் இந்த ஸ்டாலினுக்கு thanks சொல்லுவார்கள்.

அப்படித்தான் ஒரு பெண் ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்ற நிகழ்ச்சியில் மேடையில் நின்று கண்ணீரோடு இந்தத் திட்டம் எப்படி உதவியாக இருக்கிறது என்று நன்றி சொன்னார். நெகிழ்ந்துபோன நான் அவர்களை அழைத்து உச்சந்தலையில்

தொடர்ச்சி 6–ஆம் பக்கம்